## திருக்குருகைப்பிரான் பிள்ளான்
## வாழி திருநாமம்

ஐப்பசியில் பூராடத்து அவதரித்தான் வாழியே
அருட்கடலாய் எதிராசன் அடி பணிந்தோன் வாழியே
தப்பில் திருமலை நம்பி தனயன் தான் வாழியே
தமிழ் மறை ஆறாயிரத்தால் தகவுரைத்தான் வாழியே
ஒப்பிலா உடையவருக்கு உணர்விற்செய் வாழியே
ஒற்றிய சோழியன் முதலோர்க்கு ஓதுவித்தான் வாழியே
செப்ப மிகு வேதாந்தச் சீர் அறிந்தோன் வாழியே
திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகள் வாழியே

---